**நியாகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, நியாகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 தேறிய சொத்துக்களின் பெறுமதி குறைவடைதல்

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 2,295,837 தொகைக்கான திரண்ட நிதியக் கணக்கில் வரவு மீதி வருட இறுதியளவில் ரூபா 10,485,708 தொகை வரை அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டு ரூபா 2,272,955 தொகைக்கான தொழிற்படு மூலதனம் மீளாய்வாண்டின் போது ரூபா 6,543,434 இற்கான மறை மீதி வரை ரூபா 8,816,389 இனால் வீழ்ச்சியடைந்திருந்தமையால் தொழிற்படு மூலதன சிரமங்கள் ஏற்படக்கூடுமென அவதானிக்கப்பட்டது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 343,372 தொகைக்கான மின்சார உபகரணங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,121,464 தொகைக்கான பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ஆரம்ப மீதி கணக்குகளில் இருந்து நழுவியிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகளைக் கணக்கீடு செய்யும் போது ரூபா 2,870,734 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பெற வேண்டிய ரூபா 9,830,779 தொகை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடர் இயந்திரம் மற்றும் இரும்பு உருளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 02 வருடங்களுக்கு மிகையாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 42,780 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பல வருட காலமாக முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 182,193 இற்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதி ஒன்றினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 47,221,724 தொகைக்கான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) விதி 33 | - | வீதி வரி செலுத்துவதை புறக்கணிப்பு நபர்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | விதி 180 முதல் 184 வரை | - | பிணைப்பணம் பெறவேண்டிய உத்தியோகத்தர் 18 பேரிடம் பிணைப் பணம் பெற்றிருக்கவில்லை. |
| (iii) | விதி 193 | - | பாதீட்டுடன் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக்கான காரணத்தை காட்டக்கூடிய கூற்றொன்று திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரித்து, கணக்காய்விற்கு சமர்பித்திருக்க வில்லை. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரணமாணக் கோவை**

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 | 93,000 | 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன் கொண்டு வந்து காணப்படும் 27 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,366,313 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,861,355 ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 740,304 | 729,440 | 624,161 | 616,980 | 497,749 | 505,702 | 494,947 | 532,025 |
| (ii) வாடகை | 5,844,840 | 4,606,152 | 4,312,721 | 796,308 | 4,051,040 | 3,718,428 | 2,475,940 | 542,387 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 611,000 | 731,597 | 715,197 | 60,217 | 511,000 | 655,485 | 659,710 | 42,037 |
| | 7,196,144 | 6,067,189 | 5,652,079 | 1,473,505 | 5,059,789 | 4,879,615 | 3,630,597 | 1,116,449 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பான அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,261,465 தொகையான வீதவரி மற்றும் வரிகளை மீளாய்வாண்டின் போது ரூபா 624,161 தொகைக்கு சமமாக 49 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) வின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

மீளாய்வாண்டிற்கான அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,148,539 இற்கான நிலுவை வாடகை மீதியினை ஆண்டின் போது ரூபா 4,312,721 தொகை அதாவது 84 சதவீதத் தொகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்

மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 773,634 தொகைக்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் அறவீடுகள் 92 சதவீதமாக காணப்பட்டது.

### 2.2.5 முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 5,583,229 தொகை பெற வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைதத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### (ஆ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நியாகம பிரதேச சபையின் விளையாட்டு மைதானத்தை நவீன மயப்படுத்துவதற்காக ரூபா 4,470,731 தொகை மற்றும் மாகாண சபை மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் 04 செயற்திட்டங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 450,000 மீளாய்வாண்டிற்காக அங்கீகரித்திருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சபையினால் செயற்படுத்தப்பட்ட சேதனப் பசளை செயற்திட்டம் 2015 ஆண்டு நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டின் போது இடிதாக்கியதன் காரணத்தினால், குறிப்பிட்ட இயந்திரங்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்தது. பிரதேசத்தின் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக நீண்ட காலத்தீர்வு ஒன்று சபையிடம் காணப்பட்டதுடன், மாதாந்தம் ரூபா 5,000 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு தனியார் நிறுவனமொன்றிற்கு சொந்தமான காணி ஒன்றிற்கு குப்பை போடுதல் நடைபெற்றிருந்த போதிலும் அதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் சபையினால் தயாரித்து செயற்படுத்தியிருந்த போதிலும், அவை போதியளவு விடயப் பரப்பளவு ஒன்றினை அடக்கியிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் உதவி உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள்

என பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள அசையாத ஆதனமொன்று அல்லது அசையாத அல்லது அசையாத ஆதனங்கள் வகை ஒன்றின் வருடாந்த பெறுமதி மீது வீதவரியொன்று அறவிடப்பட முடியுமெனினும், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அவ்வாறான பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்தவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான வர்த்தக கட்டிடத் தொகுதிகளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 178,100 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அந்த பணத்தை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையில் ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியின் நிறுவனத்தில் பங்களிப்பு தொகையாகிய ரூபா 803,294 தொகை மற்றும் 1991 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 34,159 தொகையான செலுத்த வேண்டிய புறழ்வு வரி மீதியொன்று குறிப்பிட்ட நிறுவனத்திற்கு செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், சபை செயலாளர் அங்கீகாரத்துடன் மீளாய்வாண்டிற்கான சபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர்கள் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

பின்வரும் விடயங்களை அவதானிக்கப்பட்டன.

(i) ஆளணி திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 06 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 05 சபை ஊழியர்களுக்கு மிகையாக செலுத்தியிருந்த ரூபா 108,500 தொகையினை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) ஊழியர் கடன்**

சபையில் கடமையாற்றிய 08 ஊழியர்கள் தொடர்பாக ரூபா 129,700 இற்காக அறவிடப்படாத கடன் மீதியொன்று காணப்பட்டதுடன், அதனை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்வதற்காக செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடுவதற்காக ரூபா 141,200 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 2,780,602 தொகைக்கான பலவின கொள்வனவுகள், ஏனைய வழங்குனர்களிடன் கொள்வனவு செய்திருந்தமையால் வழங்குனர்களை பதிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பணம் சிக்கனமற்ற செலவு ஒன்றாகியுள்ளது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்பித்தல்**

மீளாய்வாண்டிற்காக திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2018 ஜூலை 19 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 11,966,961 தொகையான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 19 சதவீதம் முதல் 66 சதவீதம் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 03 செலவு விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மிகைத்து ரூபா 13,906,524 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி 07 சதவீதம் முதல் 84 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(இ) 05 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 11,085,663 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 08 சதவீதம் முதல் 44 இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**4.3 உள்ளக கணக்காய்வு**

---

சபையில் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும், உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

---

2009 ஜூன் 09 ஆம் திகதி DMA/2009(i), இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | செலவுகள் சரியான முறையில் கணக்கீடு செய்திருக்காமை. |
| | | (ii) | நாட்குறிப்புக்களுக்காக அங்கீகாரம் இன்மை. |
| (ஆ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தி யிருக்காமை. |
| | | (ii) | முன்னேறிய பிரசேதங்களை இனங்ண்டு வீதவரி வருமானத்தை அதிகரித்திருக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணி முகாமைத்துவம் | (i) வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(ii) நிலுவை பதவியணிகள் கடனை அறவீடு செய்யாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | நடைமுறை ஏற்ற நிலைமைக்கு பொருந்தக்கூடிய விதமாக பாதீடு திருத்தப்பட்டிருக்காமை. |